**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

**அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவார்கள்; துன்பமும் துயரமும் பறந்தோடும்**

(எசாயா 35:10)

ஏனென்றால் வானதூதர்கள் இயேசுவின் பிறப்பைப் பற்றி அறிவித்ததும், அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதால் மகிழ்ச்சி அதாவது கௌடாடே ஞாயிறு என்று அழைக்கிறோம். இது இயேசு எளிமையான மற்றும் முக்கியமில்லாத மக்களுக்காக வந்தார் என்பதைக் காட்டுகிறது.

முதல் வாசகத்தில், இயேசுவின் வருகையால், நாம் மீட்கப்படுவோம் என்னும் எதிர்நோக்கும் மகிழ்ச்சியும் பற்றி எசாயா கூறுவதைப் பார்க்கின்றோம். கடவுள் மனிதகுலத்திற்காக மனிதனாக மாறுவதையும், எதிர்நோக்கிக் காத்திருப்பதற்கும் ஒரு நோக்கம் உள்ளது என்றும் கூறுகின்றார். மனிதகுலம் மற்றும் இயற்கையின் மீதிருந்த சாபத்தை மாற்றினார். ஊனமுற்றோருக்கு குணமளித்தலும், மனிதகுலத்தை வாக்களிக்கப்பட்ட மீட்புக்காக காப்பாற்றுவார் என்றும் அறிகிறோம்.

இரண்டாம் வாசகத்தில், யாக்கோபு பயிரிடுபவரின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையைப் பின்பற்றுமாறு அறிவுறுத்துகிறார். எதிர்நோக்கோடு காத்திருக்கவும், ஆண்டவரின் வருகைக்காக நம் உள்ளங்களைத் தயாரிக்கவும், இயேசுவில் வேரூன்றி இருக்கவும் நாம் நினைவுறுத்தப்படுகிறோம்.

இன்றைய மத்தேயு நற்செய்தியில் யோவான் சிறையிலிருந்தபோது, இயேசு செய்த அற்புதங்கள், குணமளித்தல் ஆகியவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டபோதும், இயேசு வந்து அவரை விடுதலை செய்வார் என்பது பற்றியும் எந்த ஒரு அறிகுறியும் இல்லை. திருமுழுக்கு யோவானுக்கு மெசியாவைப் பற்றியும் அவர் எவ்வாறு செயல்படுவார் என்பதைப் பற்றியும் ஒரு எதிர்பார்ப்பு இருந்திருக்கும். அதே நேரத்தில் இயேசு திருமுழுக்கு யோவானின் சீடர்களிடம் அவர்கள் கண்டதைப் போய் சாட்சியாகச் சொல்லும்படி அறிவுறுத்தினார். மனிதகுலத்தை மீட்க தந்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதில் திருமுழுக்கு யோவான் ஒரு சக்திவாய்ந்த சாட்சியாக திகழ்வதையும் இயேசு உறுதிப்படுத்துகிறார்.

மேலும் வரலாற்றை மாற்றும் மகத்துவத்தைக் கொண்டிருப்பதற்காக திருமுழுக்கு யோவானை இயேசு பாராட்டுகிறார். திருமுழுக்கு யோவான், இயேசு யார் என்பதை மக்களுக்கு முன்னறிவித்த முன்னோடி. திருமுழுக்கு யோவான் பெண்களில் பிறந்தவர்களில் பேறுபெற்றவர் இருந்தபோதும், விண்ணரசில் மிகச்சிறியர் அவரினும் பெரியவரே என்று இயேசு கூறுகிறார்.

நம்முடைய சொந்த அனுபவங்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளில் சிக்கி கைதிகளாக மாறாமல், கடவுளின் உடனடியான பிரசன்னத்தையும் மாபெரும் ஆசீரையும் பெற்று அனுபவிக்க இன்றைய வாசகங்கள் நம்மைத் தூண்டுகின்றன. ✣

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 35: 1-6,1;
திருப்பாடல் 146: 6-10;
யாக்கோபு 5: 7-10;
மத்தேயு 11: 2-11.


INTERNAL CIRCULATION ONLY
BUL 50/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



11 டிசம்பர் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH


திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்மஸ் காலம் (25 டிசம்பர் – 1 ஜனவரி 2023)**

# களிகூர்ந்து, மகிழ்ச்சியினால் பாடுங்கள்

திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறில் நாம் ஏற்றும் இளஞ்சிவப்பு மெழுகுத்திரி மகிழ்ச்சியின் நிறத்தைக் குறிக்கிறது. திருஅவை தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு மற்றும் திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு ஆகியவற்றின்போது இளஞ்சிவப்பிலான ஆடைகளை அருள்பணியாளர்கள் திருப்பலியின்போது பயன்படுத்துகிறார்கள். இந்த மூன்றாவது மெழுகுத்திரி இடையர்களின் மெழுகுத்திரி என்று குறிப்பிடப்படுகிறது.

